மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, .இ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண். 1541/அ/2024 நாள் .03.2024

பொருள்: சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை – மாவட்ட சமூக நல அலுவலகம், வேலூர் மாவட்டம் – பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் குறை தீர்வு) சட்டம் (2013) – வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும், தாலுக்கா அளவில் வட்டாட்சியர்களையும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும், மாநகராட்சி ஆணையர், மாநகராட்சி மண்டல அளவில் உதவி ஆணையர்களையும் நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மைய முனை அலுவலர்களாக (Nodal Officers) நியமித்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

படிக்க:

1. அரசாணை எண்.80, சமூகநலம் (ம) சத்துணவு திட்டத்துறை நாள் 11.11.2016

2. சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட பிரமாணப்பத்திரம் ந.க.எண்.8910, நாள்: 25.05.2023

3. சமூகநல ஆணையர், சென்னை–05 அவர்களின் கடித ந.க.எண்.003325/SHEW/2023, நாள்: 07.03.2024

**ஆணை**

பார்வை 1 ல் காணும் அரசாணையின்படி, அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் குறை தீர்வு) சட்டம் (2013)ன் படி மாவட்ட அளவில் LCC(Local Complaint Committee) உள் புகார் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பார்வை 2 மற்றும் 3 ல் காணும் கடிதத்தின்படி வேலூர் மாவட்டத்தில் அனைத்து கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும், தாலுக்கா அளவில் வட்டாட்சியர்களையும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும், மாநகராட்சி ஆணையர், மாநகராட்சி மண்டல அளவில் உதவி ஆணையர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மைய முனை அலுவலர்களாக (Nodal Officers) கீழ் கண்ட உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

## மைய முனை அலுவலர்கள் (Nodal Officers) விவரம்

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1. | வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வேலூர் | வேலூர் கோட்டாட்சியர் |
| 2. | வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம் | குடியாத்தம் கோட்டாட்சியர் |
| 3. | வட்டாட்சியர் அலுவலகம், வேலூர் | வேலூர் வட்டாட்சியர் |
| 4. | வட்டாட்சியர் அலுவலகம், காட்பாடி | காட்பாடி வட்டாட்சியர் |
| 5. | வட்டாட்சியர் அலுவலகம், அணைகட்டு | அணைகட்டு வட்டாட்சியர் |
| 6. | வட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம் | குடியாத்தம் வட்டாட்சியர் |
| 7. | வட்டாட்சியர் அலுவலகம், பேர்ணாம்பட்டு | பேர்ணாம்பட்டு வட்டாட்சியர் |
| 8. | வட்டாட்சியர் அலுவலகம், கீ.வ.குப்பம் | கீ.வ.குப்பம் வட்டாட்சியர் |
| 9. | ஊராட்சி ஒன்றியம் அலுவலகம், வேலூர் | வட்டார வளர்ச்சி அலுவலர், வேலூர்ஒன்றியம் |
| 10. | ஊராட்சி ஒன்றியம் அலுவலகம், காட்பாடி | வட்டார வளர்ச்சி அலுவலர், காட்பாடி ஒன்றியம் |
| 11. | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அணைகட்டு | வட்டார வளர்ச்சி அலுவலர், அணைகட்டு ஒன்றியம் |
| 12. | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், குடியாத்தம் | வட்டார வளர்ச்சி அலுவலர், குடியாத்தம் ஒன்றியம் |
| 13. | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பேர்ணாம்பட்டு | வட்டார வளர்ச்சி அலுவலர், பேர்ணாம்பட்டு ஒன்றியம் |
| 14. | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கீ.வ.குப்பம் | வட்டார வளர்ச்சி அலுவலர், கீ.வ.குப்பம் ஒன்றியம் |
| 15. | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கணியம்பாடி | வட்டார வளர்ச்சி அலுவலர், கணியம்பாடி ஒன்றியம் |
| 16. | வேலூர் மாநகராட்சி அலுவலகம் | மாநகராட்சி ஆணையர், வேலூர் |
| 17. | வேலூர் மாநகராட்சி மண்டலம்–1 அலுவலகம் | உதவி ஆணையர் மண்டலம்–1 |
| 18. | வேலூர் மாநகராட்சி மண்டலம்–2 அலுவலகம் | உதவிஆணையர் மண்டலம்–2 |

| | | |
|---|---|---|
| 19. | வேலூர் மாநகராட்சி மண்டலம்-3 அலுவலகம் | உதவி ஆணையர் மண்டலம்-3 |
| 20. | வேலூர் மாநகராட்சி மண்டலம்-4 அலுவலகம் | உதவி ஆணையர் மண்டலம்-4 |
| 21. | குடியாத்தம் நகராட்சி அலுவலகம் | நகராட்சி ஆணையர், குடியாத்தம் |
| 22. | பேர்ணாம்பட்டு நகராட்சி அலுவலகம் | நகராட்சி ஆணையர், பேர்ணாம்பட்டு |

மேற்காணும் பொறுப்பு அலுவலர்கள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட அரசு (ம) அரசு சாரா அலுவலகங்கள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக வளாகங்கள் அனைத்திலும் அந்தந்த அலுவலக மற்றும் நிறுவனத் தலைமையின்கீழ் உள்ளக புகார் குழு (ICC-Internal Complaint Committee) அமைத்துள்ள பணிகளை கண்காணிக்கவும், குழு அமைக்கப்பட்ட விவரங்கள் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டதை உறுதிசெய்யவும் பணிக்கப்படுகிறார்கள். மேலும், மேற்படி குழு அமைக்கப்படாத அலுவலகங்கள், சிறு நிறுவனங்கள் மற்றும் பணியிடத்தலைவர் மீது பெறப்படும் புகார்களை மாவட்ட அளவிலான உள்ளூர் குழுவிற்கு (LCC-Local Complaint Committee) பரிந்துரைக்க பொறுப்பு அலுவலர்களாக நியமித்து ஆணையிடப்படுகிறது.

V.R. Subbu

மாவட்டஆட்சித்தலைவர்,
வேலூர்மாவட்டம்.

20/3/24 2/2

பெறுநர்:
சம்மந்தப்பட்டஅலுவலர்கள்(22)

நகல்:
சமூகநலஆணையர்,
சமூகநலஆணையரகம்,
லேடிவெலிங்டன்கல்லூரிவளாகம்,
காமராஜர்சாலை,
சென்னை-600 005.